Ministry of Social Affairs and Employment

# வெளிநாட்டில் செய்ய இருக்கும் குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை

## நெதர்லாந்துக்கு

நீங்கள் நெதர்லாந்தில் உங்கள் வாழ்க்கை துணைவியுடன் /துணைவருடன் வாழ விரும்புகிறீர்கள். நீங்கள் நெதர்லாந்து செல்லுமுன், அதற்கு நீங்கள், வெளிநாட்டில் செய்ய இருக்கும் நெதர்லாந்து நாட்டின், நடைமுறைகள், நாட்டு அமைப்பு, சமூகத்தினரின் தனி உரிமைகள் சம்பந்தமான ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும். (சுருக்கமாக: *குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை*) குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை பற்றி இந்த துண்டுப் பிரசுரத்தில் அனைத்தையும் வாசிக்கலாம்.

## நெதர்லாந்தில் குடியுரிமை ஒருங்கிணைப்பு

நீங்கள் நெதர்லாந்தில் வாழ விரும்பினால், பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- நீங்கள் நெதர்லாந்து மொழியைக் கற்க வேண்டும். இதனால்  உங்களுக்கு நெதர்லாந்தில் பங்கேற்பது எளிதாயிருக்கும்.
- நெதர்லாந்து எவ்வாறு செயல்படுகிறது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் நெதர்லாந்தில் நாம் எமக்குள் எப்படி பழகி கொள்கிறோம் என்பதையும் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.
- நீங்கள் சமூகத்தில் பங்கேற்க வேண்டும். உதாரணமாக, வேலை செய்வதன் மூலம் அல்லது ஊழியமற்ற தொழில் பங்கேற்பது மூலம். ஒரு பாடத்திட்டத்தைப் பின்பற்றுவதன் மூலமோ, ஒரு சங்கத்தில் உறுப்பினராக இருப்பதன் மூலமோ அல்லது அயலவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமோ இது சாத்தியமாகும். இதை நாங்கள் அல்லது ஒருங்கிணைதல் என்று கூறுவோம்.

## நீங்கள் குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை செய்ய வேண்டுமா?

நீங்கள் குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சைக்கு  கட்டாயபடுத்தப்பட்டீர்களா, என்பது உதாரணமாக, உங்கள் வயது அல்லது நாட்டுரிமையை பொறுத்தது. உங்களுக்கு குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை கட்டாயமா என்பதை அறிய குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களத்தின் சேவையின் (IND) வலைத்தளத்தைப் பாருங்கள்.
குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களத்தின் சேவையையும் (IND) தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி: 088 - 0430 430 (உள்ளூர் தொலைபேசி கட்டணம்)
வெளிநாட்டிலிருந்து: +31 88 0430 430

## நீங்கள் பரீட்சை எடுக்க முடியாவிட்டால் என்ன செய்வது?

சிலரால் பரீட்சை செய்ய முடியாது. உதாரணமாக, அவர்களின் உடல்நிலை காரணமாக. நீங்கள் ஒரு பரீட்சை செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதை அறிய விரும்புகிறீர்களா? இங்கே பாருங்கள்:
www.rijksoverheid.nl/onderwerpen/nieuw-in-nederland/vraag-en-antwoord/kan-ik-ontheffing-krijgen-voor-een-inburgeringsexamen.html

## வெளிநாட்டில் குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை தேர்ச்சி பெறுவது.

நெதர்லாந்தில் வாழ அனுமதிக்க, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு பொதுவாக அனுமதி தேவை. இந்த அனுமதியைப் பெறுவதற்கு, நீங்கள் முதலில் வெளிநாட்டில் ஒருங்கிணைப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

## குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை எப்படி இருக்கும்?

தேர்வில் 3 பிரிவுகள் உள்ளன:

1. *பேசும் திறன்* - நீங்கள் நெதர்லாந்து மொழியை பேசக்கூடியவராக இருக்க வேண்டும்.
2. *வாசிப்பு திறன்* - நீங்கள் நெதர்லாந்து மொழியை வாசிக்கூடியவராக வேண்டும்.
3. *நெதர்லாந்து சமுதாயத்தின் அறிவு* - நெதர்லாந்தில் நாங்கள் நாம் எமக்குள் எப்படி பழகி கொள்கிறோம் என்பதையும், நெதர்லாந்தில் என்ன விதிகள் உள்ளன என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

பரீட்சை பற்றிய மேலதிக தகவல்களை www.naarnederland.nl இல் காணலாம்.

## குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சைக்கு தயார் செய்வது.

உத்தியோகபூர்வ சுயமாக கற்பதற்கான பாடத்திட்டத்துடன் தொகுப்புடன் குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சைக்கு நீங்கள் தயார் செய்யலாம்: Naar Nederland (நெதர்லாந்து செல்லல்).
நெதர்லாந்து மொழியை பேசும் திறன், வாசிப்பு திறன் மற்றும் நெதர்லாந்து சமுதாயத்தின் அறிவுக்கான பரீட்சை கூறுகளுக்கு நீங்கள் தயாரிக்க வேண்டிய அனைத்தையும் இந்த தொகுப்பு கொண்டுள்ளது. இந்த தொகுப்பை நீங்கள் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம் அல்லது www.naarnederland.nl வலைத்தளம் வழியாக கொள்வனவு €25,00 க்கு. இத்தொகுப்பு 33 மொழிகளில் கிடைக்கிறது.

பயிற்சி பெறுவதற்கான மாதிரி பரீட்சைகளும் இணையதளத்தில் உள்ளன.

## நீங்கள் எங்கு பரீட்சை எடுக்க முடியும்?

- நெதர்லாந்து தூதரகத்தில்
- நெதர்லாந்து அன்னிய நாட்டு பிரதிநிதியின் காரியாலயம்

குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சைக்கு பதிவு செய்யும்போது உங்கள் நாட்டில் பரிட்சையை எடுக்கக்கூடிய தூதரகம் அல்லது அன்னிய நாட்டு பிரதிநிதியின் காரியாலயம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சையை நீங்கள் எடுக்கக்கூடிய தூதரகம் அல்லது அன்னிய நாட்டு பிரதிநிதியின் காரியாலயம் உங்கள் நாட்டில் இல்லையா? அப்படியாயின் நீங்கள் வேறு நாட்டிற்குச் செல்ல வேண்டும். நீங்கள் பதிவு செய்யும்போது எங்கு பரீட்சை எடுக்கப்போகிறீர்கள் என்பதை நீங்கள் தெரிவு செய்யலாம்.

## நீங்கள் எப்படி பதிவு செய்வது?

விண்ணப்ப பத்திரம் நிரப்பவும்.
பரிட்சையின் அனைத்து பகுதிகளுக்கும் € 150 செலவாகிறது. உதாரணமாக நீங்கள் ஒரு பிரதியில் தேர்ச்சி பெறாவிட்டால், தனிப்பட்ட பிரதிகளாகவும் எடுக்கலாம் *பேசும் திறன்* செலவு € 60. *வாசிப்பு திறன்* செலவு € 50. *நெதர்லாந்து சமூகத்தின் அறிவுக்கு* €40 செலவாகிறது.

## உங்கள் பதிவுக்குப் பின்னர் என்ன நடக்கும்?

குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சைக்கு பதிவுசெய்த பின்னர், கல்வி நிர்வாக முகமை (DUO) இலிருந்து ஒரு மின்னஞ்சலைப் பெறுவீர்கள். நீங்கள் எவ்வாறு கட்டணம் செலுத்தலாம் என்பதை இது விவரிக்கிறது.
உங்கள் பணத்தை கல்வி நிர்வாக முகமை (DUO)பெற்றுள்ளதா? நீங்கள் மீண்டும் கல்வி நிர்வாக முகமையிலிருந்து (DUO) ஒரு செய்தியைப் பெறுவீர்கள். உங்கள் பரிட்சைக்கு ஒரு சந்திப்பிற்க்கான காலம்/ நேரத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று அது கூறுகிறது. நீங்கள் தூதரகத்துடன் அல்லது அன்னிய நாட்டு பிரதிநிதியின் காரியாலயத்துடன் சந்திப்பிற்க்கான காலம்/ நேரத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.
குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரீட்சை பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா? www.naarnederland.nl ஐப் பாருங்கள் .
உங்களிற்கு கேள்விகள் உள்ளதா? மத்திய அரசு எண்: 1400 அழைக்கவும்.
வெளிநாட்டிலிருந்து நீங்கள்: + 31 77 4656767 இற்கு அழைக்கலாம்.
உங்கள் கேள்வியை www.rijksoverheid.nl ஊடாகவும் கேட்கலாம்.

## பரீட்சை நாளில் என்ன நடக்கும்?

- நீங்கள் ஒப்புக்கொண்ட திகதி மற்றும் நேரத்தில் சமூகமளிக்க வேண்டும்.
- நீங்கள் கல்வி நிர்வாக முகமையிலிருந்து (DUO) பெற்றுள்ள சந்திப்பிற்க்கான அனுமதியை உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும்
- நெதர்லாந்து விதிகள்படி அண்மையில் எடுக்கப்பட்ட உங்கள் வர்ண புகைப்படத்தை கொண்டு வரவேண்டும்
- வரவேற்பு இடத்தில அறிவிக்கவும்.
- உங்கள் கடவுச்சீட்டை காட்டுகிறீர்கள். அடையாளத்திற்கான *மற்றொரு ஆதாரமும்* அனுமதிக்கப்படுகிறது.
- பணியாளர் அதன் பிரதியை பதியப்படுகின்றன.
- உங்கள் கைரேகைகள் எடுக்கப்படுகின்றன.
- எல்லா தகவல்களும் கணனியில் பதிந்து வைக்கப்படுகின்றன.

## நீங்கள் அனைத்து பிரிவுகளையும் அடுத்தடுத்து எடுத்தால் பரீட்சை எப்படி இருக்கும்?

- நெதர்லாந்து சமுதாயத்தின் அறிவு பகுதி பற்றிய விளக்கம்
- *நெதர்லாந்து சமுதாயத்தின்* அறிவு பகுதியின் பங்கு பற்றுதல். பரீட்சை அதிகூடிய 30 நிமிடங்கள் ஆகும்.
- இடைவேளை
- *வாசிப்பு திறன்* பகுதி பற்றிய விளக்கம்.
- வாசிப்பு திறன் பகுதியை பங்கு பற்றுதல். பரீட்சை அதிகூடிய 35 நிமிடங்கள் ஆகும்.
- இடைவேளை
- *பேசும் திறன்* பகுதி பற்றிய விளக்கம்.
- *பேசும் திறன்* பகுதியை பங்கு பற்றுதல். பரீட்சை அதிகூடிய 30 நிமிடங்கள் ஆகும்.

நீங்கள் ஒரு கணணியில் பரீட்சையை செய்வீர்கள். நீங்கள் எழுத வேண்டியதில்லை. மொத்தத்தில் நீங்கள் தூதரகத்தில் அல்லது அன்னிய நாட்டு பிரதிநிதியின் காரியாலயத்தில் சுமார் இரண்டு மணி நேரம் இருப்பிர்கள்.

## *நீங்கள் எப்போது தேர்ச்சி பெற்றீர்கள்?*

நீங்கள் பரீட்சையின் மூன்று பகுதிகளிலும் போதுமான அளவு புள்ளிகள் பெற்றால், தேர்வு பெற்றவர் ஆவீர்கள். நீங்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா என்பதை ஒவ்வொரு பரீட்சையின் பகுதிகளும் தனித்தனியாக அறிவிக்கப்படும். நீங்கள் ஒரு பகுதிக்குத் தேர்ச்சி பெறவில்லையா? நீங்கள் அந்த பகுதியை மட்டுமே மீண்டும் செய்ய வேண்டும்.

## முடிவு எப்போது தெரியும்?

எட்டு வாரங்களுக்குள் நீங்கள் கல்வி நிர்வாக முகமை (DUO) முடிவைப் பெறுவீர்கள். பெரும்பாலும் அது வேகமாக செல்லும். நீங்கள் அனைத்து பகுதிகளுக்கும் தேர்ச்சி பெற்றுவிட்டுகிறீர்களா? உங்கள் MVV- விண்ணப்பத்தை தொடரலாம். MVV- விண்ணப்பத்திற்கு நீங்கள் மேலும் பல நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும். குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களத்தின் சேவை (IND) இதைப் பற்றிய மேலதிக தகவல்களை உங்களுக்கு வழங்க முடியும்:
www.ind.nl ஐப் பாருங்கள் நீங்கள்:
088 - 0430 430 (உள்ளூர் தொலைபேசிக் கட்டணம்) அழைக்கலாம். வெளிநாட்டிலிருந்து நீங்கள் :
+31 88 0430 430 அழைக்கலாம்.

## பரீட்சையில் தேர்ச்சி பெற்ற ஒரு வருடத்திற்குள் நீங்கள் MVV-க்கு விண்ணப்பிக்க வேண்டும்.

நீங்கள் தாமதித்து விட்டீர்களா? அப்படியாயின் நீங்கள் மீண்டும் பரீட்சையை எடுக்க வேண்டும். இறுதி பகுதியை எந்த நாளில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிர்களோ அந்த நாளில் இருந்து கணக்கு எடுக்கப்பட்டும்.

## நீங்கள் பரீட்சையில் தேர்ச்சி பெறாவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் எப்போதும் பரீட்சையை மீண்டும் எடுக்கலாம். குடியுரிமை ஒருங்கிணைப்பு அடிப்படை பரிட்சைக்கு நீங்கள் மீண்டும் பதிவு செய்து பணம் செலுத்த வேண்டும்.

## நீங்கள் பரீட்சை பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா?

www.naarnederland.nl ஐப் பார்வையிடவும். அல்லது உங்களிடம் கேள்விகள் உள்ளதா? அப்படியாயின் மத்திய அரசு எண்: 1400 அழைக்கவும். வெளிநாட்டிலிருந்து நீங்கள்: + 31 77 4656767 இற்கு அழைக்கலாம்.
நீங்கள் ஒரு மின்னஞ்சலையும் அனுப்பலாம். இதற்கு நீங்கள் www.rijksoverheid.nl க்குச் செல்லவும்.

## நெதர்லாந்தில் ஒருங்கிணைப்பு

நீங்கள் நெதர்லாந்தில் வசித்தால், நீங்கள் மேலும் குடியுரிமையை ஒருங்கிணைய வேண்டும் வேண்டும். உங்களுக்கு நெதர்லாந்து சமுதாயத்தில் பங்கேற்பது எளிதாகுகிறது, மேலும் வேலை தேடுவதற்கு உங்களுக்கு மேலதிக வாய்ப்பு உள்ளது. அதனால்தான் நீங்கள் நெதெர்லாந்திலும் குடியுரிமை ஒருங்கிணைப்பு பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும்.
அதைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா?:
www.inburgeren.nl ஐ  பார்வையிடவும்.